# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1402/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | வீரபாண்டி | த-பெ | சின்னதம்பி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 45/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2026

**எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். அ.சா.1ஐ எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.1க் சம்பவ சமயத்தில் என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீசார்கேட்டுக்கொண்டதற்கினங்க ஒத்துழைத்தேன். மற்றபடி வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார்விசாரணையில் கடந்த 24.06.2021 அன்று மாலை 4.00 மணியளவில் அ.சா.1 டன் காரைக்குடி புதுசந்தை பேட்டை மெயின் கேட் அருகில் சென்று கொண்டிருந்த போது எதிரியானவர் அ.சா.1ஐ கத்தியை கொண்டு மிரட்டி கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டி அ.சா.1ன் பாக்கெட்டில் இருந்த ரூ.1000 பணத்தை எடுக்க முயன்றதாகவும், அதனால் அதனை தடுக்க முயற்சித்த அ.ச.1ஐ எதிரியானவர் கீழே கடந்த கட்டை கம்பை எடுத்து அ.சா.1ன் தலையில் அடித்ததாகவும், நெற்றியில்காயம் ஏற்பட்டதாகவும், கொலை செய்து விடுவதாக மிரட்டியதாகவும், விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது நீதிமன்ற விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.10 15:00:24 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.1402/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பழனி | த-பெ | கருப்பையா |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 46/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | பெயிண்டர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.02.2026**

**எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். 24.06.2021 அன்று புதுசந்தை மெயின் கேட் அருகே சென்று கொண்டிருந்த போது விக்னேஷ் என்ற நபர் என்னை கூப்பிட்டார். என்ன என்று அவரிடம் கேட்டதற்கு அவர் மது போதையில் இருந்தார். அவர் என்னிடம் காசு கேட்டார் நான் இல்லை என்று கூறி விட்டேன். அதற்கு அவர் பு. சு என்று கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டினார். ஏன் இவ்வாறு பேசுகிறார் என்று அவ்வாறு கேட்டதற்கு நான் யார் என்று தெரியுமா என்னிடம் கேட்டுக்கொண்டு என்னுடைய இடது மேல்புருவத்தில் கம்பால் தாக்கினார் மேலும் அதே கம்பால் என்னை வலது காலிலும் தாக்கினார். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது, பின்னர் நான் KMC மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். என்னால் நடக்க முடியவில்லை. அக்கம் பக்கம் இருந்தவர்களிடம் அவர் யார்என்று கேட்டதற்கு செல்லதுரை மகன் விக்னேஷ் என்றும் அவர் இதே போன்ற சம்பவங்களில் ஈடுபடுவார் என்றும் கூறினார்கள். பின்னர் 26.06.2021 அன்று காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லி புகார் அளித்தேன். போலீசார்விசாரணை செய்து மேற்படி நபரை கைது செய்தார்கள். **புகார் அ.சா.ஆ.1**. போலீசார் வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

புகாரை யார் எழுதியது என்றால் காவல் நிலையத்தில் காவலர்கள் எழுதினார்கள். எப்போது ஏழுதப்பட்டது என்றால் 26.06.2021 அன்று மதியம் 1.00 -2.00 மணியளவில் எழுதப்பட்டது. என்னை

போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. எதிரி பெயர் யார் மூலமாக தெரிந்து கொண்டேன் என்றால் பெயர்தெரியாத நபர் ஒருவர் சொல்லி தெரிந்து கொண்டேன். மேற்படி விவரத்தை யார் மூலும் தெரிந்து கொண்டேன் என்று புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் 20, 25 கடைகள் இருக்கும் என்றால் இல்லை ஒரே ஒரு கடை தான் இருக்கிறது. சம்பவயிடம் கணேசபுரத்திற்கு மேயின் கேட்டிற்கு அடுத்த கேட்டில் நடந்தது என்பதால் மேற்சொன்ன ஒரு கடை தவிர மற்ற கடைகளுக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஒரு கடைக்காரரை போலீசார்விசாரணை செய்தார்களா என்றால் தெரியாது. நான் சொன்ன கம்பின் அடையாளம் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கம்பை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் தெரியாது. வீரபாண்டி, திருமுருகசெல்வம் ஆகியோர்கள் எனது நண்பர்கள் என்றால் இருவரும் எனது அண்ணன்கள். அந்த இருவர்களை தவிர வேறு கடைக்காரர்களை விசாரணை செய்தார்களா என்றால் அது பற்றி தெரியாது. புகாரில் எதிரியின் அடையாளம் கூறியுள்ளீர்களா என்றால் நியாபகம் இல்லை. நான் காவேரி மருத்துவமனைக்கு சென்றதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை மருத்துவமனையில் எந்த ரசீதும் கொடுக்கவில்லை. எனது காலில் அடிபட்டு நடக்கமுடியவில்லை என்ற விவரத்தை நான் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இவ்வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்லிகிறேன் என்றால் சரியல்ல. 3 நாள் காலதாமதத்திற்கு ஏதேனும் காரணம் புகாரில் கூறியுள்ளேனா என்றால் காரணம் சொல்லியுள்ளேன் இவ்வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்லிகிறேன் என்றால்சரியல்ல. நான் சொல்லியுள்ள முதல் விசாரணைக்கும் எதிரிக்கும்எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும் போலீசார் பொய்யான புகார் கொடுக்க சொன்னதின் பெயரில் கொடுத்து விட்டு அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.10 15:00:31 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.